# Indian Polity Notes Part 19 in Tamil

## 19. தேர்தல்

### (பகுதி - XV) (சரத்துக்கள் : - 324 – 329)

**தேர்தல் ஆணையம் (சரத்து – 324)**

- மக்களின் பிரதிநிதிகளை, நாடாளுமன்றத்திற்கும், மாநில சட்டசபைகளுக்கும் தேர்ந்தெடுக்கும் செயலை நடத்தி முடிக்க, ஒரு தேர்தல் ஆணையம் இந்திய அரசியல் அமைப்புச் சட்டப்படி அமைக்கப்பட்டுள்ளது.
- வாக்காளர் பட்டியலை தயாரித்தல், தேர்தல் நடத்துதல், கண்காணித்தல், நெறிப்படுத்தல், கட்டுப்படுத்தல் போன்ற பணிகளை செய்கிறது.

1. நாடாளுமன்றத் தேர்தல்,
2. சட்டமன்றத் தேர்தல்,
3. குடியரசுத் தலைவர் தேர்தல்,
4. குடியரசுத் துணைத் தலைவர் தேர்தல், போன்ற தேர்தல்களை நடத்துகிறது.

  - இது ஒரு சுதந்திரமான அமைப்பாகும். இவ்வாணையம் புதுடில்லியைத் தலைமையிடமாகக் கொண்டு செயலாற்றி வருகிறது. இவ்வாணையத்தை“ நிர்வாச்சன் சாதன்” என்று அழைப்பர்.
  - தேர்தல் ஆணையம் ஒரு தலைமை தேர்தல் ஆணையாளரையும் மற்றும் குடியரசுத் தலைவர் நிர்ணயிக்கும் மற்ற ஆணையர்களையும் கொண்டிருக்கும். இவர்களை குடியரசுத் தலைவர் நியமிப்பார்.
  - 16.10.1989 அன்று 2 தேர்தல் ஆணையர்கள் நியமிக்கப்பட்டனர். மீண்டும் 01.01.1990 அன்று ஒருவராக குறைக்கப்பட்டது. மீண்டும் 01.10.1993 அன்று 2 தேர்தல் ஆணையர்கள் நியமிக்கப்பட்டனர். தற்போது தலைமைத் தேர்தல் ஆணையாளர் மற்றும் 2 தேர்தல் ஆணையர்கள் உள்ளனர்.
  - இந்திய தேர்தல் ஆணையம் மூன்று நபர்களைக் கொண்டது.
  - மற்ற ஆணையர்கள் நியமிக்கப்பட்டால் தலைமைத் தேர்தல் ஆணையாளர் தலைவராக செயல்படுவார்.
  - தலைமைத் தேர்தல் ஆணையர், உச்சநீதிமன்ற நீதிபதிகளுக்கு இணையான அதிகாரம் பெற்றவராவார்.
  - சட்டமன்ற பொதுத் தேர்தல், இடைத் தேர்தல், சட்டமேலவைத் தேர்தலுக்காக குடியரசுத் தலைவர் தேர்தல் ஆணையத்திடம் கலந்தாலோத்த பிறகு தேர்தல் ஆணையாளர் தனது கடைமைகளை நிறைவேற்றுவதற்கு உதவிடும் பொருட்டு தேவையான வட்டார ஆணையாளர்களை (Regional Commissioners) நியமிக்கலாம்.

**தேர்தல் ஆணையத்தின் பணிகள்**

- அரசியல் கட்சிகளுக்கு அங்கிகாரம் அளிப்பது.
- தேர்தலில் போட்டியிடும் அரசியல் கட்சிகளுக்கும், தனி வேட்பாளர்களுக்கும் தேர்தல் சின்னங்களை ஒதுக்குவது.
- வாக்களிக்கும் நாட்களையும் வாக்குகள் எண்ணப்படும் நாட்களையும் அறிவித்தல் மற்றும் தேர்தல் இறுதி முடிவுகளை அறிவிப்பது.

**பதவிக்காலம்**

- தேர்தல் ஆணையாளர் 6 ஆண்டுகள் அல்லது 65 வயது வரை எது முதலில் வருகிறதோ அதன்படி பதவியிலிருந்து வெளியேற வேண்டும்.
- தலைமைத் தேர்தல் ஆணையாளரை பதவி நீக்கம் செய்ய, உச்சநீதிமன்ற நீதிபதிகளை நீக்குவதற்குண்டான வழி முறைகளை பின்பற்ற வேண்டும்.
- மற்ற ஆணையாளர், வட்டார ஆணையாளர்கள் ஆகியோரை, தலைமை தேர்தல் ஆணையாளரிடம் பரிந்துரையில்லாமல் பதவி நீக்கம் செய்ய இயலாது.

**வயது வந்தோர் வாக்குரிமை (சரத்து – 326)**

- அரசியலமைப்பு சட்டத்தில் வயதுவந்தோர் வாக்குரிமைத் திட்டத்தின்படி, வேறுபாடுகளின்றி 18 வயது நிரம்பிய அனைத்து இந்திய குடிமக்களும் நாடாளுமன்ற, சட்டமன்ற தேர்தல்களில் வாக்களிக் உறுதி செய்யப்பட்டுள்ளது.
- வாக்களிக்கும் வயதினை 21 வயதிலிருந்து 18 வயதாக குறைக்கப்பட்டது 61 வது சட்டத்திருத்தம் 1989 ஆகும். இது 28.03.1989 – ல் நடைமுறைக்கு வந்தது.
- குடியிருப்பில் இல்லாதவர், மனநலம் சரியில்லாதாவர், குற்றம் அல்லது உழல் அல்லது சட்டத்திற்கு புறம்பான நடவடிக்கையில் ஈடுபடுதல் போன்ற காரணங்களுக்காக அரசியலமைப்புச் சட்டம் அல்லது வேறு சட்டத்தின் கீழ் தகுதியிழப்பு செய்யப்பட்டவர்கள் வாக்களிக்க இயலாது.

**தேர்தல் தொடர்பான வகைமுறைகள்**

**சரத்து – 327**

- நாடாளுமன்ற இரு அவைகள், சட்டமன்றங்களின் இரு அவைகள் தொடர்பான, வாக்காளர் பட்டியல் தயாரித்தல், தொகுதி பிரித்தல் உள்ளிட்ட அனைத்தும் குறித்து நாடாளுமன்றம் சட்டம் இயற்றலாம்.

**சரத்து – 328**

- நாடாளுமன்றம் சட்டம் இயற்றவில்லை என்றால் மாநில சட்டமன்றம், மாநில சட்டப்பேரவை சட்ட மேலவை குறித்து சட்டம் இயற்றலாம்.
- தேர்தல் விசயங்களில் நீதிமன்றங்கள் தலையிடுவதை சரத்து – 329 தடை செய்கிறது.
- தொகுதிகளை வரையறுத்தல் அல்லது இட ஒதுக்கீட்டைச் செய்தல் தொடர்பான விசயங்களை எந்த நீதிமன்றத்திலும் வினா எழுப்ப இயலாது.

**தலைமைத் தேர்தல் ஆணையர்கள்**

| | பெயர் | பதவிக் காலம் |
|---|---|---|
| 1 | சுகுமார்சென் | 20.03.1950 முதல் 19.12.1958 |
| 2 | கே.வி.கே.சுந்தரம் | 20.12.1958 முதல் 30.09.1967 |
| 3 | எஸ்.பி.சென் வர்மா | 01.10.1967 முதல் 30.09.1972 |
| 4 | டாக்டர் நாகேந்தி சிங் | 01.10.1972 முதல் 06.02.1973 |
| 5 | டி.சுவாமிநாதன் | 07.02.1973 முதல் 17.06.1977 |
| 6 | எஸ்.எல.சேக்தர் | 18.06.1977 முதல் 17.06.1982 |
| 7 | ஆர்.கே.திரிவேதி | 18.06.1982 முதல் 31.12.1985 |
| 8 | ஆர்.வி.எஸ். பெரி சாஸ்திரி | 01.01.1986 முதல் 25.11.1990 |
| 9 | எஸ். ரமாதேவி | 26.11.1990 முதல் 11.12.1990 |
| 10 | டி.என்.சேஷன் | 12.12.1990 முதல் 11.12.1996 |
| 11 | எம்.எஸ்.கில் | 12.12.1996 முதல் 13.06.2001 |
| 12 | ஜே.எம்.லக்கோத் | 14.06.2001 முதல்07.02.2004 |
| 13 | டி.எஸ்.கிருஷ்ணமூர்த்தி | 08.02.2004 முதல் 15.05.2005 |
| 14 | டி.பி.தாண்டன் | 16.05.2005 முதல் 29.06.2006 |
| 15 | என்.கோபாலசுவாமி | 30.06.2006 முதல் 20.04.2009 |
| 16 | நவின் சாவ்லா | 21.04.2009 முதல் 29.07.2010 |
| 17 | எஸ்.ஒய்.குரோஷி | 30.06.2010 முதல் 10.06.2012 |
| 18 | வி.எஸ்.சம்பத் | 10.06.2012 முதல் 15.01.2015 |
| 19 | ஹரிசங்கள் பிரம்மா | 15.01.2015 முதல் 19.04.2015 |
| 20 | நஜ்ஸீம் சைதி | 19.04.2015 முதல் 05.07.2017 |
| 21 | அச்சல் குமார் ஜோதி | 06.07.2017 முதல் 22.01.2018 |
| 22 | ஓம் பிரகாஷ் ராவத் | 23.01.2018 முதல் 01.12.2018 |
| 23 | சுனில் அரோரா | 02.12.2018 - |